மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நேரமாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று விரும்பி கேட்கும் கேள்வி இதுதானா?

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் தகவல் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் தகவல் கொடுத்திருக்கிறார்.......

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது போன்ற சில திட்டங்களைச் செயல்படுத்தாத தற்கு நிதிநிலைமை காரணம் என்று எடுத்துச் சொன்னதை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதோ இந்த அரசு ஆதித் திராவிடர்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்ய வில்லை என்ற அடிப்படையில் பேசுகிறார்கள். அவர் எந்த கோபதாபத்தோடு பேசுகிறார் என்று தெரியவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரை இதற்கு முன் இருந்த அரசுகள் காட்டிய அக்கறையை விட சற்றுக் கூடுதலாக ஆதி திராவிடர் நலனில் இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது. வருங் காலத்திலும் இந்த உணர்வோடு அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்வில்வராயநல்லூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண். 120 திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு கலசபாக்கம் தொகுதியைச் சேர்ந்த போளூர் வட்டம் மேல்வில்வராயநல்லூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனை கொடுக்க தனியார் நிலம் எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்டுள்ள நிலம் எவ்வளவு?

(இ) மனை பிரித்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) மேல் வில்வராயநல்லூர் கிராமத்தில் பு. எண். 103 1-ல் 1.08 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டுள்ளது.

(இ) பு. எண். 103/1-ல் மொத்தம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 1.08 ஏக்கர் நிலத்தில் 0.67 ஏக்கர் நிலத்தை நிலத்தின் சொந்தக் காரர் அரசுக்கு மாற்றம் செய்துள்ளார். மீதியுள்ள 0.41 ஏக்கர் நிலத்திற்கு பதிலாக வேற்று நிலம் கொடுப்பதற்கு அரசின் அனுமதி கேட்கப்பட்டதின் பேரில் அரசு அதற்கு அனுமதித் துள்ளதாகவும் இது தொடர்பாக கருத்துரு பரிசீலனையில் இருப்பதாகவும் வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு அனுப்பிய தகவலைச் சொன்னார்கள். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் இந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு பணம் உரிமையாளர்களுக்கு வழங்கப் பட்டு விட்டது. ஆனால் நிலத்தின் உரிமையாளர்கள் இன்னும் சொந்தமாக அனுபவித்துக் கொண்டு பயிரிட்டுக் கொண்டிருக் கிறார்கள். அரிசன மக்கள் வீட்டு மனை கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, நிலச் சொந்தக்காரர் அரசுக்கு 0.67 ஏக்கர் நிலம் கைமாற்றம் செய்திருக்கிறார். மீதம் உள்ள நிலத்தை கொடுக்க இயலாது என்று எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார். பழைய நில ஆர்ஜித சட்டப்படி இந்த நிலம் கையகப்படுத்தப் பட்டதாகும். தற்போது வருவாய்த் துறை வாரியம் சில கருத்துருக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டிருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவரிமிடருந்து 10 நாட்களுக்குள் அனுப்படும். அந்த அறிக்கை பெறப்பட்ட பிறகு இன்னும் 1 மாதத்திலே அந்த மக்களுக்கு அந்த வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்கள் வசதிக்காக வீட்டு மனைக்காகவும் சாலை வசதிக்காகவும் வசதி படைத்தவர்களிடமிருந்து நிலம் வைத்திருக் கிறவர்களிடமிருந்து நிலம் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அப்படி கொடுக்காதவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: கேட்கப்பட்டிருக்கின்ற இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற நிலம் 1978-க்கு முன்னால் இருந்த பழைய நில ஆர்ஜித சட்டப்படி கையகப்படுத்தப் பட்டது. அதன்படி 4/1 நோடிபிகேஷன் கெஜட்டில் பப்ளிஷ் செய்யப்பட்ட பிறகும் கூட சொந்தக்காரர் நிலங்களைத் திரும்பப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தற்போதைய சட்டப்படி அப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது. அதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று எண்ணினால் அவர்கள் கோர்ட்டிற்குத்தான் செல்ல வேண்டும்.

திரு. ஆர். தியாகராசன்: சபாநாயகர் அவர்களே அரிசன நலத்துறை பல ஆண்டுக்காலமாக இயங்கியும் இன்னும் பல கிராமங்களிலே சுடலைப்பாதை புறம்போக்கு நிலத்திலோ அல்லது அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திலோ

இல்லாமல் பட்டா நிலங்களிலே இருப்பதால் தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு நிறைய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. அரிசன ஹாஸ்டல் மண்கட்டடத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி இது. பொதுவாகக் கேள்வி கேட்டால் பொதுவாகத்தான் பதில் வரும். பிரச்சனை தீரவேண்டுமென்றால் அதைப்பற்றி குறிப்பாகக் கேட்டால் அமைச்சர் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.

2. தகவல் கோரல்.

(அ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுதல்

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்துத் தமிழகமே அர்த்தால் செய்யவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புத் தந்தார்கள். அது சம்பந்தமாக சபையிலே கூட அன்றைக்குப் பேசப்பட்டது. 31 ஆம் தேதி என்று தேதியைக் கூடச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டம் எந்த இடத்திலே எந்த நேரத்திலே எந்தத் தேதியிலே நடைபெறும் என்று தெரியவில்லை. ஆகவே அது பற்றிய தகவல் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தகவல் இப்போது தரப்படும். அன்றைய தினம் பேசியது, அலுவல் ஆய்வுக் குழுவிலே செய்வது போல் தங்கள் அறையிலேயே வைத்துக்கொள்ளலாம் என்பது. மேலவையிலே $12\frac{1}{2}$ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே $12\frac{1}{2}$ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளலாம்.

(ஆ). சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வரும் தண்ணீர்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற தண்ணீர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே திரு. ஆண்டித் தேவர் இதுபற்றி பிரச்னை எழுப்பியபோது கவனிக்கச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். ஏதாவது இருந்தால் அறையிலே வந்து சொல்லுங்கள். இங்கே சொல்லக்கூடாது.